[1971 ஜூலை 14

Visit of Youth Goodwill Mission to Madras

* 223 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Youth Goodwill Mission visited Madras in March, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மாணவர்கள் மருத்துவர்கள், பொறியாளர்கள், வணிகர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஆகிய 350 பேர் கொண்ட ஜப்பானிய இளைஞர் நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று "சாகுரா மாரு" என்ற (ஜப்பானியக்) கப்பலில் சென்னை வந்தனர். 1971 மார்ச் 4-ஆம் நாள் முதல் 7-ஆம் நாள் வரை நகரைப் பார்வையிட்டனர். ஜப்பானிய நாட்டு இளம் தலை முறையினரிடையே உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்து ஜப்பானின் அண்டை நாடுகளைப் பார்வையிட்டு அந்நாட்டு இளைஞர்களையும், தலைவர்களையும் சந்தித்து அவர்களுடன் பழகுவதற்கு ஒரு வாய்ப்பளிக்க வகை செய்வதே இந்த நல்லெண்ணக் குழுவின் நோக்கமாகும்.

திரு. என். டென்னிஸ் : இளைஞர் உள்ளத்தில் நல்லெண்ணத்தை வளர்க்க அரசுத் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோர் உள்ளத்திலும் நல்லெண்ணத்தை வளர்ப்பது அரசின் திட்டம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 350 பேர்கள் ஜப்பானில் இருந்து நல்லெண்ணக்குழு இங்கு வந்திருக்கிறார்களே, அதுபோல இங்கிருந்து ஜப்பான் அனுப்ப உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : ஆசையிருக்கிறது அதிகமாக. ஆனால் வசதிகள் இல்லை.

திரு. எம். தேவராசன் : பல நல்லெண்ணக் குழுக்கள் இந்தியாவுக்கு வரும்போது தமிழகத்திற்கு மட்டும் வராமல் போகிறார்களே, என்ன காரணம்? இனிமேல் இங்கு வருவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி இங்கு வந்தவர்களைப் பற்றியது, வராதவர்களைப் பற்றியது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த யூத் குட்வில் மிஷனில் வருகிறவர்களில் ஹிப்பிகள் இருக்கிறார்கள் என்பது தெரியுமா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வேறு நாடுகளில் பரவிய அளவு எதுவும் தமிழகத்தில் ஹிப்பிகள் பரவியதாகச் செய்தி இல்லை. இங்குள்ளவர்கள் ஆகலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நிலைமை முற்றினால் தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1971 ஜூலை 14]

திரு. துரைமுருகன் : இங்கிருந்து வெளிநாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்களை அனுப்ப வசதியில்லை என்றார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்பாவிட்டாலும் இந்தியாவிலேயே உள்ள மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தியாவிற்குள் இருக்கும் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம். இப்போதே பல்வேறு சட்ட மன்றக் குழுக்கள் பல மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படியே அனுப்பப்படுவதாக இருந்தாலும் சட்டசபைக்குப் புறம்பாக உள்ள குழுவாகத்தான் இருக்க முடியும் என்பதை திரு. துரைமுருகனுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே என். குமாரசாமி : மாணவர்களுடைய நல்லெண்ணக் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பொது அறிவை அவர்கள் பெருக்கிக் கொள்ள வழியேற்படும். அதனால் பிற்காலத்தில் சமுதாயத்திற்குப் பயன் கிடைக்கும். ஆகவே கஷ்டத்தையோ, செலவையோ பார்க்காது வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வெளிநாட்டிற்கு நம் நாட்டில் இருந்து தூதுக்குழுவை அனுப்புகிற விஷயம். இந்திய அரசு அதற்குப் பெரு முயற்சி எடுத்து—எல்லா மாநிலங்களில் இருந்தும் திறமையானவர்களைப் பொறுக்கி தூதுக்குழுவில் அமைத்து அனுப்பவேண்டிய ஒன்றாகும். இங்கு இதுபற்றி கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம் இந்திய அரசின் கவனத்தைக் கவரும் என்று கருதுகிறேன்.

திரு. சோ. கருணைநாதன் : அப்படிப்பட்ட நல்லெண்ணக் குழு இப்போது தான் வந்திருக்கிறதா? ஏற்கெனவே பல குழுக்கள் வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப் பல முறை வந்திருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகிற ஹிப்பிகள் போன்றவர்கள் எல். எஸ். டி. மாரிசோனா போன்ற போதை தரும் பொருள்களை இங்கே விற்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எல்லாம் யாரும் விரும்பி வாங்காமல் இருக்க மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிறோம்.

Demonstration by Scheduled Caste Students at Madras

*224 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there was any demonstration by the Scheduled Caste students in Madras City about the 9th February 1971; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 9—2—1971 அன்று அரிசனங்கள், பழங்குடி மக்கள் வகுப்பினரைச் சேர்ந்த சில மாணவர்கள் தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் சென்றனர். அவர்களுடைய பிரதிநிதி அரசுத் தலைமைச் செயலாளரைச்